LORDS TODAY - International Social Media & Magazine

LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | Magazine : August 2021
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & Owner : Lords. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS









LORDS CLUBS INTERNATIONAL




# LORDS TODAY




BHAGAVAD GITA 7




BIBLE 7




KURAN 7

2021- 16796675758


www.lordsclubs.com





# தலையங்கம்...

## உலக மக்களின் மூன்று மதம் வேத நூல்கள்

### தொடர் 7




| BHAGAVAD GITA-Tamil | BIBLE Tamil | KURAN Tamil |
|---|---|---|
| 6 Page's | 6 Page's | 6 Page's |
| தொடரும்..... | தொடரும்..... | தொடரும்..... |





உலக ஊடக வரலாற்றில் முதல்முறையாக உலக மக்கள் நலன்கருதி உலகிலேயே முதல்முறையாக உலகத்தரம் வாய்ந்த 3 மதம் வேதநூல் மெகாத்தொடர் ஒவ்வொரு மாதமும் பகவத் கீதை ஆறு பக்கங்களும் பைபிள் ஆறு பக்கங்களும் குரான் ஆறு பக்கங்களும் ஆக மொத்தம் 18 பக்கங்கள் இனி மாதம் தோரும் தவறாமல் தமிழில் பிரசுரிக்கப்பட்டு வெளிவரும் என்று அனைத்து வாசகர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் அன்புடனும் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் முற்றிலுமாகப் படித்து முடித்த இந்த 3மத வேதநூல்களையும் பொதுமக்கள் அனைவரும் பக்த்தியுடன் படித்து ஊழல் பாவங்கள் உட்பட அனைத்து பாவங்களும் செய்யாமல் நேர்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழ வேண்டும் என பொதுமக்கள் அனைவருக்கும் அன்புடன் வேண்டுகோள் வைக்கின்றேன். இனி நல்லதை படித்து நல்லதை படைத்து, இவ்வுலக மக்களுக்கு நல்லதையே செய்து பொதுமக்களின் அனவைருடைய பொருளாதாரத்தையும் உயர்திடுவோம். அன்புடன் உங்கள்,


லார்ட்ஸ் ம பால்ராஜ்

**LORDS TODAY**
RNI Ref. No. : 1287921 Title Code : TNBL04354
International social media and magazine
Editor | Publisher | and Owner
**LORDS CLUBS INTERNATIONAL**
Govt. Reg. No. : 1359/2013
International social service clubs
International President | and Founder
Web : www.lordsclubs.com

# மெகா தொடர் PART - 7







हतो वा प्राप्स्यसि स्वर्गम्
जित्वा वा भोक्ष्यसे महीम्।
तस्मादुत्तिष्ठ कौन्तेय
युद्धाय कृतनिश्चयः ॥ ३७ ॥

கொல்லப் படினோ வானுலகெய்துவாய். வென்றால் பூமியாள்வாய். ஆதலால் போர் செயத் துணிந்து நீ எழுந்து நில். 37

सुखदुःखे समे कृत्वा
लाभालाभौ जयाजयौ।
ततो युद्धाय युज्यस्व
नैवं पापमवाप्स्यसि ॥ ३८ ॥

இன்பம், துன்பம், இழவு, பேறு, வெற்றி, தோல்வி; இவற்றை நிகரெனக் கொண்டு நீ, போர்க் கொருப் படுக. இவ்வண்ணம் புரிந்தால் பாவ மெய்தாய். 38







एषा तेऽभिहिता साङ्ख्ये
बुद्धिर्योगे त्विमां शृणु ।
बुद्ध्या युक्तो यया पार्थ
कर्मबन्धं प्रहास्यसि ॥ ३९ ॥

இங்ஙனம் உனக்கு ஸாங்க்ய வழிப்படி புத்தி சொன்னேன். இனி யோக வழியால் சொல்லு கிறேன்; கேள். இந்த புத்தி கொண்டவன் கர்மத் தளைகளைச் சிதறி விடுவான். 39

नेहाभिक्रमनाशोऽस्ति
प्रत्यवायो न विद्यते ।
स्वल्पमप्यस्य धर्मस्य
त्रायते महतो भयात् ॥ ४० ॥

இதில் முயற்சிக் கழிவில்லை. இது வரம்பு மீறிய செய்கையுமன்று. இந்த தர்மத்தில் சிறி திருப்பினும், அஃதொருவனைப் பேரச்சத்தி னின்று காப்பாற்றும். 40







व्यवसायात्मिका बुद्धि-
रेकेह कुरुनन्दन ।
बहुशाखा ह्यनन्ताश्च
बुद्धयोऽव्यवसायिनाम् ॥ ४१ ॥

குருகுலத்தோன்றலே! உறுதியுடைய புத்தி இவ்வுலகத்தில் ஒருமை யுடையது. உறுதி யில்லாதோரின் மதி பலகிளைப்பட்டது, முடிவற்றது. 41

यामिमां पुष्पितां वाचं
प्रवदन्त्यविपश्चितः ।
वेदवादरताः पार्थ
नान्यदस्तीति वादिनः ॥ ४२ ॥

வேதங்களின் வெளியுரையில் மகிழ்வார் சிலர், பூக்களைப்போன்ற (அலங்காரச்) சொற்கள் பேசுகிறார்கள். தமது கொள்கை யொழிய மற்றது பிழை யென்கிறார்கள். 42







कामात्मानः स्वर्गपरा
जन्मकर्मफलप्रदाम् ।
क्रियाविशेषबहुलां
भोगैश्वर्यगतिं प्रति ॥ ४३ ॥

இவர்கள் காமிகள்; ஸ்வர்க்கத்தைப் [illegible]
மாகக் கொண்டோர், பிறப்புக்கும் தொழி[illegible]
கும் பயன் வேண்டுவோர்; போகத்[illegible]
ஆட்சியையும் வேண்டுவோர்; பல[illegible]
கிரியைகளைக் காட்டிப் பேசுகிறார்கள்.

भोगैश्वर्यप्रसक्तानां
तयाऽपहृतचेतसाम् ।
व्यवसायात्मिका बुद्धिः
समाधौ न विधीयते ॥ ४४ ॥

இவர்கள் சொல்வதைக் கேட்டு ம[illegible]
போகத்திலும் ஆட்சியிலும் பற்[illegible]
ருடைய நிச்சயபுத்தி ஸமாதியில் [illegible]
பெறாது.






त्रैगुण्यविषया वेदा निस्त्रैगुण्यो भवार्जुन ।
निर्द्वन्द्वो नित्यसत्त्वस्थो निर्योगक्षेम आत्मवान् ॥


மூன்று குணங்களுக் குட்பட்டவற்றைக் குறித்து வேதங்கள் பேசுகின்றன. அர்ஜுனா, நீ மூன்று குணங்களையுங் கடந்தோனாகுக. * இருமைகளற்று, எப்போதும் உண்மையில் நின்று, யோக க்ஷேமங்களைக் கருதாமல், ஆத்மாவை வசப்படுத்தியவனாகுக. 45

यावानर्थ उदपाने सर्वतः सम्प्लुतोदके ।
तावान्सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानतः ॥ ४६ ॥

எங்கும் நீர் நிரம்பிய இடத்தில் ஒரு சிறு குட்டம் என்ன பொருளுடையது; அன்ன பொருளே ஞானமுடைய பிராமணனுக்கு வேதங்களுமுடையன. 46

---

*இருமைகள் : நன்மை தீமை, ஒளி இருள், குளிர் வெப்பம் போன்ற இரட்டை நிலைகள்.






कर्मण्येवाधिकारस्ते
मा फलेषु कदाचन ।
मा कर्मफलहेतुर्भू-
र्मा ते सङ्गोऽस्त्वकर्मणि ॥ ४७ ॥

தொழில் செய்யத் தான் உனக்கதிகார முண்டு. அதன் பயன்களில் எப்போதுமே உனக்கதிகாரமில்லை. செய்கையின் பயனைக் கருதாதே; தொழில் செய்யாமலுமிராதே. 47

योगस्थः कुरु कर्माणि
सङ्गं त्यक्त्वा धनञ्जय ।
सिद्ध्यसिद्ध्योः समो भूत्वा
समत्वं योग उच्यते ॥ ४८ ॥

தனஞ்ஜயா, யோகத்தில் நின்று, பற்றை நீக்கி, வெற்றி தோல்விகளை நிகரெனக்கொண்டு தொழில்களைச் செய்க. நடுநிலையே யோகமெனப்படும். (48)

தொடரும்.....

# BIBLE

## மெகா தொடர்
## PART - 7




## தொடக்கநூல் அதிகாரம் – 15 – திருவிவிலியம்

### ஆபிராமுடன் கடவுளின் உடன்படிக்கை

1 இந்நிகழ்ச்சிகளுக்குப் பின், ஆண்டவரின் வாக்கு ஆபிராமுக்கு ஒரு காட்சி வழியாக வந்து அறிவித்தது: ஆபிராம்! அஞ்சாதே. நான் உனக்குக் கேடயமாக இருப்பேன். உனக்குப் பெரும் கைம்மாறு கிடைக்கும்.

2 அப்பொழுது ஆபிராம், என் தலைவராகிய ஆண்டவரே, எனக்கு என்னதான் தருவீர்? எனக்கோ குழந்தையே இல்லை! தமஸ்கு நகர் எலியேசர்தான் எனக்குப்பின் என் இல்லத்திற்கு உரிமை மகன் ஆகப்போகிறான்!

3 நீர் எனக்குக் குழந்தை ஒன்றும் தராததால் என் வீட்டு அடிமை மகன் எனக்குப் பின் உரிமையாளன் ஆகப் போகிறான் என்றார்.

4 அதற்கு மறுமொழியாக, இவன் உனக்குப்பின் உரிமையாளன் ஆகமாட்டான். ஆனால், உனக்குப் பிறப்பவனே உனக்குப்பின் உரிமையாளன் ஆவான் என்று ஆபிராமுக்கு ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது.

5 அப்பொழுது ஆண்டவர் ஆபிராமை வெளியே அழைத்து வந்து, வானத்தை நிமிர்ந்து பார். முடியுமானால், விண்மீன்களை எண்ணிப்பார். இவற்றைப் போலவே உன் வழிமரபினரும் இருப்பர் என்றார்.

6 ஆபிராம் ஆண்டவர்மீது நம்பிக்கை கொண்டார். அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார்.

7 ஆண்டவர் ஆபிராமிடம், இந்நாட்டை உனக்கு உரிமைச் சொத்தாக அளிக்க உன்னைக் கல்தேயரின் ஊர் என்ற நகரிலிருந்து இங்கு அழைத்து வந்த ஆண்டவர் நானே என்றார்.


8 அதற்கு ஆபிராம், என் தலைவராகிய ஆண்டவரே, இதை நான் உரிமையாக்கிக் கொள்வேன் என்பதை எப்படித் தெரிந்து கொள்வேன்? என்றார்.

9 ஆண்டவர் ஆபிராமிடம், மூன்று வயதுள்ள இளம் பசு, மூன்று வயதுள்ள வெள்ளாடு, மூன்று வயதுள்ள செம்மறியாடு, ஒரு காட்டுப்புறா, ஒரு மாடப்புறா ஆகியவற்றை என்னிடம் கொண்டுவா என்றார்.

10 ஆபிராம் இவற்றை எல்லாம் அவரிடம் கொண்டுவந்து, அவைகளை இரண்டிரண்டு கூறுகளாக வெட்டி, ஒவ்வொரு பகுதியையும் அததற்கு இணையான பகுதிக்கு எதிரெதிரே வைத்தார். ஆனால், பறவைகளை அவர் வெட்டவில்லை.

11 துண்டித்த உடல்களைப் பறவைகள் தின்ன வந்தபொழுது ஆபிராம் அவற்றை விரட்டிவிட்டார்.

# BIBLE



12 கதிரவன் மறையும் நேரத்தில் ஆபிராமுக்கு ஆழ்ந்த உறக்கம் வந்தது. அச்சுறுத்தும் காரிருள் அவரைச் சூழ்ந்தது.

13 ஆண்டவர் ஆபிராமிடம், நீ உறுதியாகத் தெரிந்து கொள்ள வேண்டியது: உன் வழிமரபினர் வேறொரு நாட்டிற்குப் பிழைக்கச் செல்வர். அங்கே அவர்கள் நானூறு ஆண்டுகள் அடிமைகளாகக் கொடுமைப்படுத்தப்படுவர்.

14 அவர்கள் அடிமை வேலை செய்யும் நாட்டிற்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்குவேன். அதற்குப்பின் மிகுந்த செல்வங்களுடன் அந்நாட்டைவிட்டு அவர்கள் வெளியேறுவர்.

15 நீ மிகவும் முதிர்ந்த வயதில் அமைதியாக உன் மூதாதையரிடம் சென்றபின், நல்லடக்கம் செய்யப்படுவாய்.

16 நான்காம் தலைமுறையில் அவர்கள் இங்கே திரும்பி வருவர். ஏனெனில், எமோரியர் இழைக்கும் தீமை இன்னும் முழுமை அடையவில்லை என்றார்.

17 கதிரவன் மறைந்ததும் இருள்படர்ந்தது. அப்பொழுது புகைந்து கொண்டிருந்த தீச்சட்டி ஒன்றும் எரிந்து கொண்டிருந்த தீப்பந்தம் ஒன்றும் அந்தக் கூறுகளுக்கிடையே சென்றன.

18 அன்றே ஆண்டவர் ஆபிராமுடன் ஓர் உடன்படிக்கை செய்து, எகிப்திலுள்ள ஆற்றிலிருந்து யூப்பிரத்தீசு பேராறுவரை உள்ள

19 கேனியர், கெனிசியர், கத்மோனியர்,

20 இத்தியர், பெரிசியர், இரபாவியர்

21 எமோரியர், கானானியர், கிர்காசியர், எபூசியர் ஆகியோர் வாழும் இந்நாட்டை உன் வழிமரபினர்க்கு வழங்குவேன் என்றார்.ஆகாரும் இஸ்மயேலும்

## தொடக்கநூல் அதிகாரம் – 16 – திருவிவிலியம்

### ஆகாரும் இஸ்மயேலும்


1 ஆபிராமின் மனைவி சாராய்க்கு மகப்பேறு இல்லை. சாராய்க்கு ஆகார் என்ற எகிப்திய பணிப்பெண் ஒருத்தி இருந்தாள்.

2 சாராய் ஆபிராமிடம், ஆண்டவர் என்னைப் பிள்ளை பெறாதபடி செய்துவிட்டார். நீர் என் பணிப்பெண்ணிடம் உறவு கொள்ளும். ஒருவேளை அவள் எனக்காகப் பிள்ளை பெற்றுத் தரக்கூடும் என்றார். ஆபிராம் சாராயின் சொல்லைக் கேட்டார்.

3 ஆபிராம் கானான் நாட்டில் பத்து ஆண்டுகள் வாழ்ந்தபின், அவர் மனைவி சாராய் எகிப்தியப் பணிப்பெண் ஆகாரைத் தம் கணவருக்கு மனைவியாகக் கொடுத்தார்.

4 அவர் ஆகாருடன் உறவு கொண்டபின் அவள் கருவுற்றாள். தான் கருவுற்றிருப்பதைக் கண்டதும் தன் தலைவியை அவள் ஏளனத்துடன் நோக்கினாள்.

# BIBLE




5 அப்பொழுது சாராய் ஆபிராமிடம், எனக்கு இழைக்கப்பட்ட தீங்கு உம்மேல் இருக்கட்டும். நீர் தழுவும்படி நானே கொடுத்த என் பணிப்பெண், அவள் கருவுற்றிருக்கிறாள் என்பதைக் கண்டதிலிருந்து என்னை ஏளனமாக நோக்குகிறாள். ஆண்டவரே எனக்கும் உமக்கும் நீதி வழங்கட்டும் என்றார்.

6 ஆபிராம் சாராயிடம், உன் பணிப்பெண் உன் அதிகாரத்தின்கீழ் இருக்கின்றாள். உனக்கு நல்லதாகப் படுவதை அவளுக்குச் செய் என்றார். இதற்குப்பின் சாராய் அவளைக் கொடுமைப்படுத்தினார். ஆகவே, ஆகார் சாராயிடமிருந்து தப்பி ஓடினாள்.

7 ஆண்டவரின் தூதர் அவளைப் பாலைநிலத்தில் இருந்த ஒரு நீரூற்றுக்கு அருகில் கண்டார். அந்த ஊற்று சூருக்குச் செல்லும் வழியில் இருந்தது.

8 அவர் அவளை நோக்கி, சாராயின் பணிப்பெண் ஆகார், நீ எங்கிருந்து வருகின்றாய்? எங்கே போகின்றாய்? என்று கேட்டார். அதற்கு அவள், என் தலைவி சாராயிடமிருந்து நான் தப்பி ஓடுகிறேன் என்றாள்.

9 ஆண்டவரின் தூதர் அவளிடம், நீ உன் தலைவியிடம் திரும்பிச் சென்று அவளுக்குப் பணிந்து நட என்றார்.

10 பின்பு, ஆண்டவரின் தூதர் அவளிடம், உன் வழி மரபினரை யாரும் எண்ண முடியாத அளவுக்குப் பெருகச் செய்வேன் என்றார்.

11 மீண்டும் ஆண்டவரின் தூதர் அவளிடம், இதோ! கருவுற்றிருக்கும் நீ ஒரு மகனைப் பெற்றெடுப்பாய். அவனுக்கு இஸ்மயேல் எனப் பெயரிடுவாய். ஏனெனில், உன் துயரத்தில் ஆண்டவர் உனக்குச் செவிசாய்த்தார்.

12 ஆனால், அவன் காட்டுக் கழுதை போல் வாழ்பவனாக இருப்பான். எல்லோரையும் அவன் எதிர்ப்பான் எல்லோரும் அவனை எதிர்ப்பார்கள். தன் உறவினருக்கு எதிரியாக அவன் வாழ்வான் என்றார்.


13 அப்பொழுது, என்னைக் காண்பவரை நானும் இங்கே கண்டேன் அல்லவா? என்று அவள் சொல்லித் தன்னுடன் பேசிய ஆண்டவரை, காண்கின்ற இறைவன் நீர் என்று பெயரிட்டழைத்தாள்.

14 ஆகவே, அந்தக் கிணற்றிற்கு பெயேர் லகாய்ரோயி மீ என்ற பெயர் வழங்கலாயிற்று. அது காதேசுக்கும் பெரேதுக்கும் இடையே இருக்கின்றது.

15 ஆகார் ஆபிராமுக்கு மகன் ஒருவனைப் பெற்றெடுத்தாள். ஆகார் பெற்ற தம் மகனுக்கு ஆபிராம் இஸ்மயேல் என்று பெயரிட்டார்.

16 ஆகார் ஆபிராமுக்கு இஸ்மயேலைப் பெற்றெடுத்த பொழுது அவருக்கு வயது எண்பத்தாறு.ஆபிரகாமுடன் கடவுளின் உடன்படிக்கை-விருத்தசேதனம்

# BIBLE




## தொடக்கநூல் அதிகாரம் – 17 – திருவிவிலியம்

### ஆபிரகாமுடன் கடவுளின் உடன்படிக்கை-விருத்தசேதனம்

1 ஆபிராமுக்கு வயது தொண்ணூற்றொன்பதாக இருந்தபொழுது, ஆண்டவர் அவருக்குத் தோன்றி, நான் எல்லாம் வல்ல இறைவன். எனக்குப் பணிந்து நடந்து, மாசற்றவனாய் இரு.

2 உனக்கும் எனக்குமிடையே ஓர் உடன்படிக்கையை நான் ஏற்படுத்திக்கொள்வேன்; உன்னை மிகமிகப் பெருகச் செய்வேன் என்றார்.

3 அப்பொழுது ஆபிராம் பணிந்து வணங்க, கடவுள் அவரிடம் கூறியது:

4 உன்னுடன் நான் செய்துகொள்ளும் உடன்படிக்கை இதுவே: எண்ணற்ற நாடுகளுக்கு நீ தந்தை ஆவாய்.

5 இனி உன்பெயர் ஆபிராம் அன்று; ஆபிரகாம் என்ற பெயரால் நீ அழைக்கப்படுவாய். ஏனெனில், எண்ணற்ற நாடுகளுக்கு உன்னை நான் மூதாதையாக்குகிறேன்.

6 மிகப் பெருமளவில் உன்னைப் பலுகச் செய்வேன்; உன்னிடமிருந்து நாடுகளை உண்டாக்குவேன். உன்னிடமிருந்து அரசர்கள் தோன்றுவர்.


7 தலைமுறை தலைமுறையாக உன்னுடனும், உனக்குப்பின் வரும் உன் வழிமரபினருடனும் என்றுமுள்ள உடன்படிக்கையை நான் நிலைநாட்டுவேன். இதனால் உனக்கும் உனக்குப்பின் வரும் உன் வழிமரபினருக்கும் நான் கடவுளாக இருப்பேன்.

8 நீ தங்கியிருக்கும் நாட்டையும் கானான் நாடு முழுவதையும் என்றுமுள்ள உரிமைச் சொத்தாக உனக்கும் உனக்குப்பின் உன் வழி மரபினருக்கும் வழங்குவேன். நான் அவர்களுக்குக் கடவுளாக இருப்பேன் என்றார்.

9 மீண்டும் கடவுள் ஆபிரகாமிடம், நீயும் தலைமுறைதோறும் உனக்குப்பின் வரும் உன் வழிமரபினரும் என் உடன்படிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

10 நீங்கள் கடைப்பிடிக்குமாறு உன்னோடும் உனக்குப்பின் வரும் உன் வழிமரபினரோடும் நான் செய்து கொள்ளும் உடன்படிக்கை இதுவே: உங்களுள் ஒவ்வொரு ஆணும் விருத்தசேதனம் செய்து கொள்ள வேண்டும்.

# BIBLE




11 உங்கள் உடலில் விருத்தசேதனம் செய்துகொள்ள வேண்டும். இதுவே உங்களுக்கும் எனக்குமிடையே உள்ள உடன்படிக்கையின் அடையாளம்.

12 தலைமுறை தலைமுறையாக எட்டு நாள் ஆன உங்கள் ஆண்குழந்தை ஒவ்வொன்றுக்கும் நீங்கள் விருத்தசேதனம் செய்ய வேண்டும். அக்குழந்தை வீட்டில் பிறந்திருந்தாலும், உன் வழிமரபைச் சாராமல் வேற்றினத்தாரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டிருந்தாலும், அப்படியே செய்ய வேண்டும்.

13 உன்வீட்டில் பிறந்த குழந்தைக்கும் விலைக்கு வாங்கியதற்கும் கண்டிப்பாக விருத்தசேதனம் செய்ய வேண்டும். இவ்வாறு, என் உடன்படிக்கை உன் உடலில் என்றுமுள்ள உடன்படிக்கையாக இருக்கும்.

14 தன் உடலில் விருத்தசேதனம் செய்யப்படாத எந்த ஆண்மகனும், என் உடன்படிக்கையை மீறியதால், தன் இனத்தாரிடமிருந்து விலக்கப்படுவான் என்றார்.

15 பின்பு, கடவுள் ஆபிரகாமிடம், உன் மனைவியைச் சாராய் என அழைக்காதே. இனிச் சாரா என்பதே அவள் பெயர்.

16 அவளுக்கு ஆசி வழங்குவேன். அவள் வழியாக உனக்கு ஒரு மகனையும் தருவேன். அவளுக்கு நான் ஆசி வழங்க, அவள் வழியாக நாடுகள் தோன்றும். மக்களினங்களுக்கு அரசர்களும் அவளிடமிருந்து உதிப்பர் என்றார்.

17 ஆபிரகாம் தாள்பணிந்து வணங்கி, நகைத்து, நூறு வயதிலா எனக்குக் குழந்தை பிறக்கும்? தொண்ணூறு வயது சாராவா குழந்தை பெறப் போகிறாள்? என்று தமக்குள் சொல்லிக் கொண்டார்.

18 ஆபிரகாம் கடவுளிடம், உம் திருமுன் இஸ்மயேல் வாழ்ந்தாலே போதும் என்றார்.

19 கடவுள் அவரிடம், அப்படியன்று. உன் மனைவி சாரா உனக்கு ஒரு மகனைப் பெறுவாள். அவனுக்கு நீ ஈசாக்கு எனப் பெயரிடுவாய். அவனுடனும் அவனுக்குப்பின் வரும் அவன் வழிமரபினருடனும் என்றுமுள்ள உடன்படிக்கையை நான் நிலைநாட்டுவேன்.


20 இஸ்மயேலைப் பற்றிய உன் வேண்டுதலை நான் கேட்டேன். அவனுக்கு ஆசி வழங்கி, அவனை மிகப்பெருமளவில் பலுகச் செய்வேன். பன்னிரு இளவரசர்களுக்கு அவன் தந்தையாவான்; அவனிடம் இருந்து ஒரு பெரிய நாடு தோன்றும்.

21 ஆனால், சாரா உனக்கு அடுத்த ஆண்டு இதே காலத்தில் பெறப்போகும் ஈசாக்கிடம் என் உடன்படிக்கையை நிலைநாட்டுவேன் என்றார்.

22 அவருடன் பேசி முடித்தபின், கடவுள் ஆபிரகாமை விட்டுச் சென்றார்.

23 பின்னர், ஆபிரகாம் தம் மகன் இஸ்மயேலுக்கும் தம் வீட்டில் பிறந்த எல்லாருக்கும், தாம் விலைக்கு வாங்கிய எல்லாருக்கும், அதாவது, தம்

# BIBLE




வீட்டில் இருந்த ஒவ்வொரு ஆணுக்கும், கடவுள் தமக்குக் கூறியபடியே அதே நாளில் அவர்கள் உடலில் விருத்தசேதனம் செய்தார்.

24 ஆபிரகாமுக்கு அவர் உடலில் விருத்தசேதனம் செய்யப்பட்டபொழுது அவருக்கு வயது தொண்ணூற்றொன்பது.

25 அவர் மகன் இஸ்மயேலுக்கு அவன் உடலில் விருத்தசேதனம் செய்யப்பட்டபொழுது, அவனுக்கு வயது பதின்மூன்று.

26 ஆபிரகாமுக்கும் அவர் மகன் இஸ்மயேலுக்கும் ஒரே நாளில் விருத்தசேதனம் செய்யப்பட்டது.

27 அவருக்குச் செய்யப்பட்டதுபோல அவர் வீட்டில் பிறந்தவர்கள், வேற்றினத்தாரிடமிருந்து அவர் விலைக்கு வாங்கியவர்கள் ஆகிய எல்லா ஆண்களுக்கும் விருத்தசேதனம் செய்யப்பட்டது.


தொடரும்.....

Advertisement



# KURAN மெகா தொடர்

## PART - 7




2:121 الَّذِينَ آتَيْنَاهُمُ الْكِتَابَ يَتْلُونَهُ حَقَّ تِلَاوَتِهِ أُولَٰئِكَ يُؤْمِنُونَ بِهِ ۗ وَمَن يَكْفُرْ بِهِ فَأُولَٰئِكَ هُمُ الْخَاسِرُونَ

2:121. யாருக்கு நாம் வேதத்தைக் கொடுத்தோமோ அவர்கள் அதை எவ்வாறு ஓதி(ஒழுகி)ட வேண்டுமோ, அவ்வாறு ஓதுகிறார்கள்; அவர்கள் தாம் அதன் மேல் நம்பிக்கையுள்ளவர்கள்; யார் அதை நிராகரிக்கின்றார்களோ அவர்கள் பெரும் நஷ்டவாளிகளே!

2:122 يَا بَنِي إِسْرَائِيلَ اذْكُرُوا نِعْمَتِيَ الَّتِي أَنْعَمْتُ عَلَيْكُمْ وَأَنِّي فَضَّلْتُكُمْ عَلَى الْعَالَمِينَ


2:122. (யஃகூப் என்ற) இஸ்ராயீலின் மக்களே! நான் உங்களுக்கு அளித்த என் நன்கொடைகளை நினைவு கூறுங்கள்; இன்னும் நிச்சயமாக நான் உங்களை உலக மக்கள் எல்லோரையும்விட மேம்பாடுடையோராகச் செய்தேன்.

2:123 وَاتَّقُوا يَوْمًا لَّا تَجْزِي نَفْسٌ عَن نَّفْسٍ شَيْئًا وَلَا يُقْبَلُ مِنْهَا عَدْلٌ وَلَا تَنفَعُهَا شَفَاعَةٌ وَلَا هُمْ يُنصَرُونَ

2:123. இன்னும், (வரப் போகும்) அந்நாளிலிருந்து, உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்; அன்று ஓர் ஆத்மா பிறிதோர் ஆத்மாவுக்கு உதவி செய்ய இயலாது; அதனிடமிருந்து (அதன் பாவங்களுக்குப் பரிகாரமாக) எந்த நஷ்ட ஈடும் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது; எந்த சிபாரிசும் அதற்கு பலனளிக்காது; இவர்கள்(எவர் மூலமாகவும் எந்த) உதவியும் செய்யப்பட மாட்டார்கள்.

2:124 وَإِذِ ابْتَلَىٰ إِبْرَاهِيمَ رَبُّهُ بِكَلِمَاتٍ فَأَتَمَّهُنَّ ۖ قَالَ إِنِّي جَاعِلُكَ لِلنَّاسِ إِمَامًا ۖ قَالَ وَمِن ذُرِّيَّتِي ۖ قَالَ لَا يَنَالُ عَهْدِي الظَّالِمِينَ

2:124. (இன்னும் இதையும் எண்ணிப்பாருங்கள்;) இப்ராஹீமை அவருடைய இறைவன் சில





கட்டளைகளையிட்டுச் சோதித்தான்; அவற்றை அவர் முழுமையாக நிறைவேற்றினார்; நிச்சயமாக நான் உம்மை மக்களுக்கு இமாமாக(த் தலைவராக) ஆக்குகிறேன்" என்று அவன் கூறினான்; அதற்கு இப்ராஹீம் "என் சந்ததியினரிலும் (இமாம்களை ஆக்குவாயா?)" எனக் கேட்டார்; என் வாக்குறுதி(உம் சந்ததியிலுள்ள) அநியாயக்காரர்களுக்குச் சேராது என்று கூறினான்.

2:125 وَإِذْ جَعَلْنَا الْبَيْتَ مَثَابَةً لِّلنَّاسِ وَأَمْنًا وَاتَّخِذُوا مِن مَّقَامِ إِبْرَاهِيمَ مُصَلًّى ۖ وَعَهِدْنَا إِلَىٰ ۖ
إِبْرَاهِيمَ وَإِسْمَاعِيلَ أَن طَهِّرَا بَيْتِيَ لِلطَّائِفِينَ وَالْعَاكِفِينَ وَالرُّكَّعِ السُّجُودِ

2:125. (இதையும் எண்ணிப் பாருங்கள்; "க..பா என்னும்) வீட்டை நாம் மக்கள் ஒதுங்கும் இடமாகவும் இன்னும், பாதுகாப்பான இடமாகவும் ஆக்கினோம்; இப்ராஹீம் நின்ற இடத்தை - மகாமு இப்ராஹீமை - தொழும் இடமாக நீங்கள் ஆக்கிக்கொள்ளுங்கள்" (என்றும் நாம் சொன்னோம்). இன்னும் "என் வீட்டைச் சுற்றி வருபவர்கள், தங்கியிருப்பவர்கள், ருகூ.. செய்பவர்கள், ஸுஜூது செய்பவர்கள் ஆகியோருக்காகத் தூய்மையாக அதனை வைத்திருக்க வேண்டும்" என்று இப்ராஹீமிடமிருந்தும், இஸ்மாயீலிடமிருந்தும் நாம் உறுதி மொழி வாங்கினோம்.

2:126 وَإِذْ قَالَ إِبْرَاهِيمُ رَبِّ اجْعَلْ هَٰذَا بَلَدًا آمِنًا وَارْزُقْ أَهْلَهُ مِنَ الثَّمَرَاتِ مَنْ آمَنَ مِنْهُم بِاللَّهِ وَ
الْيَوْمِ الْآخِرِ ۖ قَالَ وَمَن كَفَرَ فَأُمَتِّعُهُ قَلِيلًا ثُمَّ أَضْطَرُّهُ إِلَىٰ عَذَابِ النَّارِ ۖ وَبِئْسَ الْمَصِيرُ

2:126. (இன்னும் நினைவு கூறுங்கள்:) இப்ராஹீம்: "இறைவா! இந்தப் பட்டணத்தைப் பாதுகாப்பான இடமாக ஆக்கி வைப்பாயாக! இதில் வசிப்போரில்




யார் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புகிறார்களோ அவர்களுக்குப் பல வகைக் கனிவர்க்கங்களையும் கொண்டு உணவளிப்பாயாக" என்று கூறினார்; அதற்கு இறைவன் கூறினான்: "(ஆம்;) யார் நம்பிக்கை கொள்ளவில்லையோ அவனுக்கும் சிறிது காலம் சுகானுபவத்தை அளிப்பேன்; பின்னர் அவனை நரக நெருப்பின் வேதனையில் நிர்பந்திப்பேன் - அவன் சேரும் இடம் மிகவும் கெட்டதே."

2:127 وَإِذْ يَرْفَعُ إِبْرَٰهِمُ الْقَوَاعِدَ مِنَ الْبَيْتِ وَإِسْمَٰعِيلُ رَبَّنَا تَقَبَّلْ مِنَّا إِنَّكَ أَنْتَ السَّمِيعُ الْعَلِيمُ

2:127. இப்ராஹீமும், இஸ்மாயீலும் இவ்வீட்டின் அடித்தளத்தை உயர்த்திய போது, "எங்கள் இறைவனே! எங்களிடமிருந்து (இப்பணியை) ஏற்றுக் கொள்வாயாக; நிச்சயமாக நீயே (யாவற்றையும்) கேட்பவனாகவும் அறிபவனாகவும் இருக்கின்றாய்" (என்று கூறினார்)

2:128 رَبَّنَا وَاجْعَلْنَا مُسْلِمَيْنِ لَكَ وَمِنْ ذُرِّيَّتِنَا أُمَّةً مُسْلِمَةً لَكَ وَأَرِنَا مَنَاسِكَنَا وَتُبْ عَلَيْنَا إِنَّكَ أَنْتَ التَّوَّابُ الرَّحِيمُ

2:128. "எங்கள் இறைவனே! எங்கள் இருவரையும் உன்னை முற்றிலும் வழிபடும் முஸ்லிம்களாக்குவாயாக; எங்கள் சந்ததியினரிடமிருந்தும் உன்னை முற்றிலும் வழிபடும் ஒரு கூட்டத்தினரை (முஸ்லிம் சமுதாயத்தை) ஆக்கி வைப்பாயாக; நாங்கள் உன்னை வழிபடும் வழிகளையும் அறிவித்தருள்வாயாக; எங்களை(க் கருணையுடன் நோக்கி எங்கள் பிழைகளை) மன்னிப்பாயாக; நிச்சயமாக நீயே மிக்க




மன்னிப்போனும், அளவிலா அன்புடையோனாகவும் இருக்கின்றாய்.”

2:129 بَ وَالْحِكْمَةَ وَ يُزَكِّيْهِمْ رَبَّنَا وَابْعَثْ فِيْهِمْ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِكَ وَيُعَلِّمُهُمُ الْكِتٰ
اِنَّكَ اَنْتَ الْعَزِيْزُ الْحَكِيْمُ _

2:129. “எங்கள் இறைவனே! அவர்களிடையே உன்னுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து; அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுத்து; அவர்களைத் தூய்மைப்படுத்தக் கூடிய ஒரு தூதரை அவர்களிலிருந்தே எழுந்திடச் செய்வாயாக - நிச்சயமாக நீயே வல்லமை மிக்கோனுமாகவும், பெரும் ஞானமுடையோனாகவும் இருக்கின்றாய்.”


2:130 وَاِنَّهٗ فِى ۚ يَا وَلَقَدِ اصْطَفَيْنٰهُ فِى الدُّ وَمَنْ يَّرْغَبُ عَنْ مِّلَّةِ اِبْرٰهٖمَ اِلَّا مَنْ سَفِهَ نَفْسَهٗ
الْاٰخِرَةِ لَمِنَ الصّٰلِحِيْنَ

2:130. இப்ராஹீமுடைய மார்க்கத்தைப் புறக்கணிப்பவன் யார்?-தன்னைத் தானே தாழ்த்திக் கொள்பவனைத் தவிர; நிச்சயமாக நாம் அவரை(த் தூய்மையாளராக) இவ்வுலகில் தேர்ந்தெடுத்தோம்; நிச்சயமாக அவர் மறுமையில் நல்லடியார் கூட்டத்திலேயே இருப்பார்.

2:131 قَالَ اَسْلَمْتُ لِرَبِّ الْعٰلَمِيْنَ اِذْ قَالَ لَهٗ رَبُّهٗۤ اَسْلِمْ

2:131. இன்னும், அவரிடம் அவருடைய இறைவன் “(என்னிடம் முற்றிலும் வழிபட்டவராகச்) சரணடையும்” என்று சொன்னபோது அவர், “அகிலங்களின் இறைவனுக்கு முற்றிலும் வழிபட்டோனாகச் சரணடைந்தேன்” என்று கூறினார்.

2:132 وَاَنْتُمْ وَوَصّٰى بِهَآ اِبْرٰهٖمُ بَنِيْهِ وَ يَعْقُوْبُ يٰبَنِىَّ اِنَّ اللّٰهَ اصْطَفٰى لَـكُمُ الدِّيْنَ فَلَا تَمُوْتُنَّ اِلَّا
مُّسْلِمُوْنَ




2:132. இதையே இப்ராஹீம் தம் குமாரர்களுக்கு வஸிய்யத்து (உபதேசம்) செய்தார்; யஃகூபும் (இவ்வாறே செய்தார்); அவர் கூறினார்: "என் குமாரர்களே! அல்லாஹ் உங்களுக்குச் சன்மார்க்கத்தை (இஸ்லாமை) தேர்ந்தெடுத்துள்ளான். நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணிக்காதீர்கள்."

2:133 عْبُدُ أَمْ كُنْتُمْ شُهَدَاءَ إِذْ حَضَرَ يَعْقُوبَ الْمَوْتُ إِذْ قَالَ لِبَنِيهِ مَا تَعْبُدُونَ مِنْ بَعْدِي ۖ قَالُوا نَ
لَهُ مُسْلِمُونَ إِلَٰهَكَ وَإِلَٰهَ آبَائِكَ إِبْرَاهِيمَ وَإِسْمَاعِيلَ وَإِسْحَاقَ إِلَٰهًا وَاحِدًا وَنَحْنُ


2:133. யஃகூபுக்கு மரணம் நெருங்கியபோது, நீங்கள் சாட்சியாக இருந்தீர்களா? அப்பொழுது அவர் தம் குமாரர்களிடம் "எனக்குப் பின் நீங்கள் யாரை வணங்குவீர்கள்?" எனக் கேட்டதற்கு, "உங்கள் நாயனை-உங்கள் மூதாதையர் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியோரின் நாயனை-ஒரே நாயனையே-வணங்குவோம் அவனுக்கே(முற்றிலும்) வழிப்பட்ட முஸ்லிம்களாக இருப்போம்" எனக் கூறினர்.

2:134 وَلَا تُسْأَلُونَ عَمَّا كَانُوا يَعْمَلُونَ ۖ لَهَا مَا كَسَبَتْ وَلَكُمْ مَا كَسَبْتُمْ تِلْكَ أُمَّةٌ قَدْ خَلَتْ

2:134. அந்த உம்மத்து(சமூகம்) சென்றுவிட்டது; அவர்கள் சம்பாதித்தவை அவர்களுக்கே; நீங்கள் சம்பாதித்தவை உங்களுக்கே! அவர்கள் செய்து கொண்டிருந்தது பற்றி நீங்கள் கேட்கப்பட மாட்டீர்கள்.

2:135 وَمَا كَانَ مِنَ قُلْ بَلْ مِلَّةَ إِبْرَاهِيمَ حَنِيفًا تَهْتَدُوا وَقَالُوا كُونُوا هُودًا أَوْ نَصَارَىٰ
الْمُشْرِكِينَ

2:135. "நீங்கள் யூதர்களாக அல்லது கிறிஸ்தவர்களாக மாறிவிடுங்கள் - நீங்கள் நேர்வழியை அடைவீர்கள்" என்று அவர்கள் கூறுகிறார்கள். "அப்படியல்ல!



(நேரான வழியைச் சார்ந்த) இப்ராஹீமின் மார்க்கத்தையே பின்பற்றுவோம், (இணை வைக்கும்) முஷ்ரிக்குகளில் நின்றும் அவரில்லை" என்று (நபியே!) நீர் கூறுவீராக!

وَاِسْحٰقَ وَيَعْقُوْبَ وَ قُوْلُوْٓا اٰمَنَّا بِاللّٰهِ وَمَآ اُنْزِلَ اِلَيْنَا وَمَآ اُنْزِلَ اِلٰٓى اِبْرٰهٖمَ وَاِسْمٰعِيْلَ 2:136
وَنَحْنُ ▯ لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْهُمْۖ الْاَسْبَاطِ وَمَآ اُوْتِيَ مُوْسٰى وَعِيْسٰى وَمَآ اُوْتِيَ النَّبِيُّوْنَ مِنْ رَّبِّهِمْ
لَهٗ مُسْلِمُوْنَ

2:136. (முஃமின்களே!)"நாங்கள் அல்லாஹ்வையும், எங்களுக்கு இறக்கப்பட்ட(வேதத்)தையும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் இன்னும் அவர் சந்ததியினருக்கு இறக்கப்பட்டதையும்; மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் கொடுக்கப்பட்டதையும் இன்னும் மற்ற நபிமார்களுக்கும் அவர்களின் இறைவனிடமிருந்து கொடுக்கப்பட்டதையும் நம்புகிறோம்; அவர்களில் நின்றும் ஒருவருக்கிடையேயும் நாங்கள் வேறுபாடு காட்ட மாட்டோம்; இன்னும் நாங்கள் அவனுக்கே முற்றிலும் வழிபடுகிறோம்" என்று கூறுவீர்களாக.

ۚ فَسَيَكْفِيْكَهُمُ فِيْ شِقَاقٍ وَاِنْ تَوَلَّوْا فَاِنَّمَا هُمْ ۚ فَاِنْ اٰمَنُوْا بِمِثْلِ مَآ اٰمَنْتُمْ بِهٖ فَقَدِ اهْتَدَوْا 2:137
وَهُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ ۗ اللّٰهُ

2:137. ஆகவே, நீங்கள் ஈமான் கொள்வதைப்போல் அவர்களும் ஈமான் கொண்டால் நிச்சயமாக அவர்கள் நேர்வழியை பெற்றுவிடுவார்கள்; ஆனால் அவர்கள் புறக்கணித்துவிட்டால் நிச்சயமாக அவர்கள் பிளவில்தான் இருக்கின்றனர். எனவே அவர்களி(ன் கெடுதல்களி)லிருந்து உம்மைக் காப்பாற்ற அல்லாஹ்வே போதுமானவன்;

தொடரும்.....

இந்தியா, தமிழக சென்னை சிட்டியில் அனைத்துப் பகுதியிலும் கண்ணிய மிகு காவல்துறையைக் கலங்கம் செய்து விபச்சார வியாபாரிகளுக்கு துணை நிற்கின்றார்கள் பல மாமுல் வாங்கும் களவாணி காவலர்கள். விபச்சார வியாபாரம் கடந்த நான்கு ஆண்டுகளில் சென்னை சிட்டி முழுவதும் புற்று நோய் போன்று புரையோடி பரவியுள்ளது. லாக்டவுன் நேரங்களில் கூட தடையின்றி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இந்த விபச்சாரத்திற்கு பெயர்தான் அழகிய வட இந்திய மற்றும் தமிழ் பெண்களை வைத்தும் தமிழ் கலாச்சாரத்தைக் கெடுத்தும் பெண்களை வைத்து நிர்வாண முறையில் ஆண்களையும் நிர்வாணப்படுத்தியும் பாடி மசாஜ் செய்வதும் எக்ஸ்ட்ரா சர்வீஸ் என்ற பெயரில் முழுவிபச்சாரம் செய்வதும் ஆகும்.

இதனால் தமிழகத்தில் உள்ள கிராமங்கள் உட்பட அனைத்து பகுதியில் இருந்தும் சென்னைக்கு சாப்ட்வேர் நிறுவனங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களுக்கும் வேலைக்கு வந்துள்ள சிறு பையன்களுக்கும் மற்றும் படிப்பதற்கு வந்துள்ள கல்லூரி மாணவர்களுக்கும் எல்லாம் நார்மல் மெசேஜ் தொடர்ச்சியாக அனைவரது செல்போனுக்கும் அனுப்பி அழைத்து அவர்களிடம் இருந்தும் தவறான முறையில் வருமானம் ஈட்டி பயன் அடைகின்றனர்.

இதனால் திருமணத்திற்கு முன்பே சிறுவயதிலேயே தவறான சிந்தனையுடன் ஒருவிதமான போதையுடன் மனநோயாளிகளாக புத்திகெட்டு, கெட்டு குட்டிச்சுவராவது மட்டுமின்றி இங்கு செல்பவர்கள் அனைவரும் கொரோனா முதல் எச்ஐவி வரையில் பல்வேறு பால்வினை நேய்களுக்கும் ஆளாகின்றனார்கள்.

இதில் கண்ணிய மிகு காவல்துறையை கலங்கம் செய்யும் பல மாமுல் வாங்கும் களவாணி காவலர்களின் ஆதரவுடனும் காவலுடனும் தான் இந்த தொழில் மிகச் சிறப்பான முறையில் பெயர்பலகை மசாஜ்க்கு சம்பந்தமில்லாத மாற்று பெயர்களில் அமைக்கப்பட்டு சென்னை சிட்டி முழுவதும் அல்லாமல் கோவை மற்றும் சேலம் போன்ற சிட்டிகளிலும் கடந்த நான்கு ஆண்டு காலமாக இன்று வரையில் தொடர்ச்சியாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பது எங்களின் ஊடக நிருபர்கள் முன் களப் பணியாளர்களின் குற்றச்சாட்டு ஆகும்.

கண்ணிய மிகு காவல்துறையைச் சார்ந்த அனைத்துக் காவலர்களின் செல்போன்களையும் ஒட்டுக்கேட்டால் கண்ணிய மிகு காவல்துறையை லஞ்சம் வாங்கி கலங்கப்படுத்தும் காவலர்களை லஞ்ச ஒழிப்புத்துறை உட்கார்ந்த இடத்திலிருந்தே ஆதாரத்துடன் கண்டறிந்து பிடித்து விடலாம். அப்படி ஆதாரத்துடன் பிடிபட்ட ஊழல்வாதி குற்றவாளிகளை மட்டும் பணிநீக்கம் செய்துவிட்டு அந்தப் பணியை நேர்மையான வர்களுக்கு அளித்து குற்றங்களையும் ஊழலையும் தடுத்து பொதுமக்களை மிகச் சிறப்பான முறையில் பாது காக்கலாம் என்று ஆகஸ்ட்டு மாதம் 23 ஆம் தேதி 2021 ஆம் ஆண்டு அன்று கண்ணியமிகு தமிழக காவல்துறையை தற்போது தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ள தமிழக முதல்வர் நண்பர் திரு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் தமிழக தலைமை லஞ்சஒழிப்புத்துறை, மாவட்ட ஆட்சியர்கள், ஆளுனர் மற்றும் இந்திய குடியரசு தலைவர் அனைவருக்கும் லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் தலைவர் ம.பால்ராஜ் அவர்கள் இமெயில் வழியாக கடிதம் அனுப்பியுள்ளார்.

தற்போது நல்லாட்சி செய்து வரும் தமிழக முதல்வர் நண்பர் திரு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நல் வாழ்த்துக்கள். தமிழக அரசின் அனைத்து அரசு துறைகளையும் ஊழல் அற்ற துறைகளாய் மாற்றவேண்டும் என்றும் தமிழக பொதுமக்களை நோயற்ற நிலையிலும் ஏழ்மையற்ற நிலையிலும் வழிநடத்திச் செல்லவேண்டும் என்று லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சார்பாக நல் வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றோம்.





LORDS
CLUBS INTERNATIONAL
Lords Real Estate
India-Chennai City | Near City | All Property - Buying & Selling
Email : lionpaulraj@gmail.com Web : www.lordsclubs.com
98405 59673
97908 55633
Business Profits used for Social Services



# LORDS Graphics Designer’s

**Logo Design | Printing Design | Flex Design | Web Design | Mobile App Development | 3D Multimedia**

**2 D Animation & 3 D Animation**

e-Mail : lordsclubsinternational@gmail.com | Web : lordsclubs.com

**Business Profits used for Social Services**

**98405 59673**

**97908 55633**